

# பிள்ளைப் பராமரிப்பு வழங்குநர் ஒருவரிடம் கேட்க க கூடிய பொதுவான கேள்விகள்

தரமான பிள்ளைப் பராமரிப்புத் திட்டங்கள், பிள்ளைகள் பாதுகாப்பையும் ஆதரவையும் கவனிக்கப்படலையும் உணரச் செய்கின்றன/ குடும்பத்தினர் மற்றும் கல்வி புகட்டுபவர்களுடன் உறவுகளை உருவாக்குவதன் மூலமாகவும், பிள்ளைகள் முன்னேறவும் வளர்ச்சிபெறவும் உதவுகின்ற ஈடுபாடு மற்றும் கவனம் அளித்தலுடனான சூழலை அளிப்பதன் மூலமும் அவை பிள்ளைகளின் கற்றல் மற்றும் மேம்பாட்டுக்கு ஆதரவளிக்கின்றன மற்றும்,

உங்களுடைய உங்களுடய பிள்ளையின் தேவைகளுக்கு பொருந்துகின்ற தரமான பிள்ளைப் பராமரிப்பினைத் தேடலுக்கு உங்களுக்கு வழிகாட்ட இந்தக் கேள்விகளை உபயோகிக்கவும்.

## கட்டணங்கள் மற்றும் கிடைக்கப்பெறும் தன்மை

1. எனது குழந்தைக்கான ஒரு இடம் உங்களிடம் உள்ளதா? (இல்லையெனில், ஒரு காத்திருப்போர் பட்டியல் உள்ளதா, மற்றும் அது எவ்வளவு நீண்டதாக இருக்கின்றது?)
2. இதற்கான கட்டணம் யாது ? மேலதிக கட்டணங்கள் ஏதேனும் உள்ளனவா? (மேலதிக கட்டணங்கள் பற்றி விளக்கும்படி பராமரிப்பாளர்களைக் கேட்கவும், உதாரணமாக, விடுமுறைநாட்கள், உடல்நலமற்ற நாட்கள், வழமையான நேரத்துக்குப் பின்னர் பிள்ளை நிற்றல் அல்லது விண்ணப்பக் கட்டணங்கள்)
3. இந்த மையத்தில் மானியம் அளிக்கப்படும் இடங்கள் உள்ளனவா?
4. நீங்கள் முழுநேர மற்றும் பகுதி நேர ஆள் சேர்ப்புச் செய்கிறீர்களா?
5. கூட்டிச் செல்லுதல்/ கொண்டு விடுதல் நேரங்கள் எவ்வளவுக்கு நெகிழ்வாக உள்ளன?
6. பெற்றோருடன் பராமரிப்பாளர்கள் எப்படித் தகவல்கள் பரிமாறுகிறார்கள் மற்றும் பெற்றோர் எப்போது வருகை புரியலாம்?

**உண்மை:**

ஒரு வீடு அல்லது உரிமம் பெற்ற மையம் ஆகிய இரண்டில் ஒன்றிலிருந்து நீங்கள் பராமரிப்பைத் தெரிவு செய்யலாம். சில பராமரிப்பகத்தினர் உரிமம் பெற்ற ஒரு முகமையுடன் தொடர்பு கொண்டிருப்பார்கள் மற்றும் மற்றவர்கள் உரிமம் பெறாதவர்கள் ஆவர். கட்டணங்கள் வேறுபடும்.

## உடல் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு

1. நீங்கள் உரிமம் பெற்றவரா அல்லது பெறாதவரா?
2. எத்தனை குழந்தைகளை நீங்கள் பராமரிக்கின்றீர்கள்?
3. குழந்தைகளின் உடல் ஆரோக்கியத்தினை நீங்கள் எப்படி நிச்சயப்படுத்துகிறீர்கள்? (உ.ம். உறக்கம், தூய்மை)
4. ஒரு குழந்தைக்கு உடல்நலமில்லாமல் போனால் என்ன நடக்கும் ? (உ.ம்., அவர்கள் வீட்டிற்கு அனுப்பப்படுகின்றனரா அல்லது மருந்துகள் கொடுக்கப்படுமா)

**உண்மை:**

உரிமம் பெறாத பராமரிப்பாளர்கள் தங்கள் வீட்டில் ஐந்துபிள்ளைகளுக்கு மேல் கவனம் அளிக்க மாட்டார்கள்.

ontario.ca/childcare

ISBN 978-1-4606-5203-9 (PDF) (Tamil) © ஒன்ராறீயோவுக்கான க்வீன்ஸ் ப்ரிண்டர் 2015

Ontario

5.உங்கள் வசம் இருக்கும் பாதுகாப்பு நடவடிக்கைகள் யாவை? (உ.ம்., தீயணைக்கும் கருவி, புகை/ CO கண்டுபிடிப்புக் கருவிகள், முதலுதவிப் பெட்டி, பாதுகாப்பான வாசற்தவுகள் மற்றும் செருகிகள்)
6. அவசரகால நிலையில் இடத்தை விட்டு அகலுவதற்கான உங்கள் திட்டம் என்ன?
7. கடுமையான ஒவ்வாமைகள் கொண்ட குழந்தைகளுக்கு நீங்கள் ஒவ்வமைக் காப்பினை (anaphylaxis plan) அளிக்கிறீர்களா?

## உணவு மற்றும் ஊட்டச்சத்து

1. என்னவகையான சிற்றுண்டி கள்மற்றும் சாப்பாட்டினை நீங்கள் வழங்குகிறீர்கள்
2.உணவு அங்கேயே தயாரிக்கப்படுகிறதா அல்லது வெளியிலிருந்து தருவிக்கப்படுகிறதா?
3. சில குறிப்பிட்டவகை உணவுகள் உங்கள் மையத்தில் அனுமதிக்கப்படுவதில்லையா? (உ.ம்., உலர் கனிகள்(nuts) அல்லது இதர ஒவ்வாமைப் பொருள்கள்)
4. எங்கள் குடும்ப உணவு முறைத் தேவைகளை நீங்கள் அனுசரிக்க இயலுமா?
5. தாய்ப்பாலினை வைத்திருக்க ஒரு குளிர்சாதனப்பெட்டி உள்ளதா மற்றும் பால் புகட்டுவதற்கான நேர அட்டவணையும் உள்ளதா?

### தேடுங்கள்:

அனைத்து 4 உணவுக் குழுக்களையும் உணவுத் திட்டங்கள் உள்ளடக்குதல்.

## கற்றல் மற்றும் விளையாட்டு

1. நாள் முழுவதுமாக எனது குழந்தை என்ன செய்வார்?
2. கற்றல், ஆக்கத்திறன் மற்றும் சமூகத்தினருடனான ஊடாட்டத்தில் விளையாட்டுப் பொருட்கள் எப்படி ஆதாரம் அளிக்கின்றன.
3. உள்ளக மற்றும் வெளிப்புற விளையாட்டு ஆகிய இரண்டையும் நீங்கள் எப்படி ஊக்கப்படுத்துகின்றீர்கள்? வெளியில் எவ்வளவு நேரம் செலவிடப்படுகிறது?
4. நிகழ்ச்சித் திட்டத்தில் வேறுபட்ட கலாச்சாரப் பாரம்பரியங்கள் எப்படி ஒருங்கிணைக்கப்படுகின்றன?
5. நிகழ்ச்சித் திட்டத்தில் குடும்ப அங்கத்தினர்கள் எப்படி ஈடுபடுத்தப்படுகின்றனர்?
6. ஒரு குழந்தை கோபம் கொண்டால் அல்லது மனம் துவண்டு போனால் என்னவாகிறது?

### தேடுங்கள்:

- விளையாட்டு மற்றும் தேடிக்கண்டறிதல் மூலமாக குழந்தைகள் கற்றுக்கொள்வதற்கு ஆதரவளிக்கும் ஒரு சூழல்

- வரவேற்கப்படுவதும் உற்சாகப்படுத்துவதுமான குடும்பத்தினரின் ஈடுபாடு

## பராமரிப்பாளர்கள் மற்றும் பயிற்றுவிக்கப்பட்ட தொழில்தகைமையாளர்கள்

1. பணியாளர் மற்றும் பராமரிப்பாளர்கள் என்ன தகுதிகள் மற்றும் பயிற்சிகளைக் கொண்டிருக்கிறார்கள்? (உ.ம்., பதிவு பெற்ற பிள்ளைப்பருவக் கல்வியாளர் (Early Childhood Educator))
2. மையத்தில் இருக்கும் எவரேனும் CPR மற்றும் முதலுதவி சான்றிதழ் பெற்றிருக்கிறார்களா?
3. பணியாளர் அல்லது பராமரிப்பாளர் உடல்நலமில்லாமல் இருந்தால் அல்லது வராமல் இருந்தால் என்ன நடக்கும்?

### தேடுங்கள்:

பிள்ளைகளுடன் இருந்து பணி செய்வது தொடர்பான தகுதிகள் அல்லது பயிற்சியைப் பணியாளர் அல்லது பராமரிப்பபளிப்பவர் கொண்டிருத்தல்

ontario.ca/childcare

ISBN 978-1-4606-5203-9 (PDF) (Tamil) © ஒன்ராறீயோவுக்கான க்வீன்ஸ் ப்ரிண்டர் 2015

Ontario